©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 7.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 17] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 27, 2022
சித்திரை 14, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண். 123, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வன (FR.5)த் துறை, 6 டிசம்பர் 2021]*

தமிழ்நாடு அரசு, கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த மரக்காணம் வட்டத்தின் நடுக்குப்பம், செய்யாங்குப்பம், செட்டிக்குப்பம், அனுமந்தை ஊரணி, கீழ்புதுப்பட்டு, கூனிமேடு, திருக்கனூர் கிராமங்கள் மற்றும் வானூர் வட்டத்தின் கிளாப்பாக்கம், கொழுவாரி, கழுப்பெரும்பாக்கம், காரட்டை மற்றும் தேவனந்தல் கிராமங்களில் அமைந்துள்ள கழுவெளி உவர்நீர் ஏரி ஈரநிலப் பகுதியை சுற்றுச்சூழல், விலங்கினங்கள், மலர்கள் மற்றும் புவியியல் அளவீடுகளில் போதிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுவதாலும், வன உயிரினங்களையும் அவற்றின் சுற்றுச்சூழலையும் பாதுகாத்தல், விளம்பரப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்காகவும்:

எனவே, தற்போது 1972 ஆம் ஆண்டு வனஉயிரினம் (பாதுகாப்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1972) 18 ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் , மேற்சொன்ன பகுதியை கழுவெளி ஈரநிலப் பறவைகள் சரணாலயமாக அமைப்பதற்குக் கருதுவதற்கான அவரது நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை**

1. மாவட்டத்தின் பெயர் : விழுப்புரம்
2. வட்டத்தின் பெயர் : 1. மரக்காணம்
   2. வானூர்

3. வருவாய் கிராமங்களின் பெயர் மற்றும் மறுஅளவீட்டு எண் (வட்டம் வாரியாக):

| *கிராமங்களின் பெயர்* | *மறுஅளவீட்டு எண்கள்* | *பரப்பளவு (எக்டேர்கள்)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **மரக்காணம் வட்டம்** | | |
| 38. நடுக்குப்பம் | 593 | 9.40.0 |
| | 655 | 24.38.0 |
| | 662/3 | 1.62.0 |
| | 663 | 3.27.0 |
| | 666 | 0.70.0 |
| | 674/2 | 1.24.5 |
| | 678/2 | 2.15.5 |
| | 682 | 1234.45.0 |
| | | 1277.22.0 |
| 53. செய்யாங்குப்பம் | 1/1 | 48.24.0 |
| | 15/4 | 0.20.5 |
| | | 48.44.5 |
| 54. செட்டிக்குப்பம் | 1 | 152.93.5 |
| | | 152.93.5 |
| 52. அனுமந்தை | 1/1 | 75.89.5 |



*DTP-II-2-(17) (T Sup)—1

| கிராமங்களின் பெயர் | மறுஅளவீட்டு எண்கள் | பரப்பளவு (எக்டேர்கள்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | 75.89.5 |
| 47. ஊரணி | 1 | 102.87.0 |
| | 5/9 | 0.41.5 |
| | 6/10 | 0.33.5 |
| | 7/1 | 0.79.0 |
| | 13 | 5.05.0 |
| | | 109.46.0 |
| 56. கீழ்புதுப்பட்டு | 1 | 349.22.0 |
| | | 349.22.0 |
| 55. கூனிமேடு | 1/1 | 981.16.0 |
| | | 981.16.0 |
| 46. திருக்கனூர் | 75/1 | 4.08.5 |
| | 75/9 | 28.83.0 |
| | | 32.91.5 |
| **வானூர் வட்டம்** | | |
| 14. கிளாப்பாக்கம் | 195 | 382.12.5 |
| | | 382.12.5 |
| 16. தேவனந்தல் | 80/2 | 0.01.0 |
| | 91/1 | 0.56.0 |
| | 91/3 | 1.35.0 |
| | 92/1 | 2.96.0 |
| | 93/2 | 1.94.0 |
| | 94/3 | 3.88.0 |
| | 95/1 | 3.36.0 |
| | 96/1 | 2.02.0 |
| | 97/1 | 1.70.0 |
| | 98/1 | 1.72.0 |
| | 99/1 | 1.94.0 |
| | 102/3 | 0.84.0 |
| | 103 | 2.05.0 |
| | 104 | 1.50.0 |
| | 105 | 1.48.0 |
| | 106 | 1.52.5 |
| | 107/1 | 1.42.0 |
| | 108/1 | 1.32.0 |

| கிராமங்களின் பெயர் | மறுஅளவீட்டு எண்கள் | பரப்பளவு (எக்டேர்கள்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | 109/1 | 1.70.0 |
| | 110/1 | 2.10.0 |
| | 111 | 1.76.0 |
| | 112 | 2.40.0 |
| | 113 | 1.66.0 |
| | 114 | 1.90.0 |
| | 115 | 79.94.0 |
| | | 123.03.5 |
| 17. காரட்டை | 205 | 426.65.50 |
| | | 426.65.50 |
| 36. கொழுவாரி | 1 | 900.23.5 |
| | | 900.23.5 |
| 35. கழுப்பெரும்பாக்கம் | 1 | 292.30.0 |
| | | 292.30.0 |

**சுருக்கம்**

**விழுப்புரம் மாவட்டம்**

| வட்டத்தின் பெயர் | கிராமங்களின் பெயர் | பரப்பளவு (எக்டேர்கள்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **மரக்காணம் வட்டம்** | 38. நடுக்குப்பம் | 1277.22.0 |
| | 35. செய்யாங்குப்பம் | 48.44.5 |
| | 54. செட்டிக்குப்பம் | 152.93.5 |
| | 52. அனுமந்தை | 75.89.5 |
| | 47. ஊரணி | 109.46.0 |
| | 56. கீழ்புதுப்பட்டு | 349.22.0 |
| | 55. கூனிமேடு | 981.16.0 |
| | 46. திருக்கனூர் | 32.91.5 |
| | | 3027.25.0 |
| **வானூர் வட்டம்** | 14. கிளாப்பாக்கம் | 382.12.5 |
| | 16. தேவனந்தல் | 123.03.5 |
| | 17. காரட்டை | 426.65.5 |
| | 36. கொழுவாரி | 900.23.5 |
| | 35. கழுப்பெரும்பாக்கம் | 292.30.0 |
| | | 2124.35.0 |
| **பெரு மொத்தம்** | | 5151.6.0 |

**4. சரணாலயத்தின் பெயர்**

கழுவெளி ஈரநிலப் பறவைகள் சரணாலயம்

**எல்லை விவரங்கள்**

| | | |
|---|---|---|
| கிழக்கு | : | பாண்டிச்சேரி சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலை: ஊரணி கிராம எண்.47, அனுமந்தை கிராம எண்.52, செய்யாங்குப்பம் கிராம எண்.53, செட்டிக்குப்பம் கிராம எண். 54 மற்றும் சூனிமேடு கிராம எண்.55 ஆகியவற்றின் கிராம எல்லைகள் |
| மேற்கு | : | அறுவடி, கிராம எண்.223, காரட்டை கிராம எண்.17 மற்றும் தேவனந்தல் கிராம எண்.16 ஆகியவற்றின் கிராம எல்லைகள் |
| தெற்கு | : | கீழ்புதுப்பட்டு கிராம எண்.56, கொழுவாரி கிராம எண்.36 மற்றும் கழுப்பெரும்பாக்கம் கிராம எண். 35 ஆகியவற்றின் கிராம எல்லைகள் |
| வடக்கு | : | கிளாப்பாக்கம் கிராம எண். 14, நடுக்குப்பம் கிராம எண். 38 மற்றும் திருக்கனூர் கிராம எண். 46 ஆகியவற்றின் கிராம எல்லைகள் |

மேற்சொன்ன ஏரி, 70° 45' முதல் 70.55' வரையிலான அட்சரேகை மற்றும் 12° முதல் 12' 10,' தீர்க்கரேகைக்கு இடையே அமைந்துள்ளது. மேற்சொன்ன ஏரி, கிழக்குக் கடற்கரையோரமாக, வங்காள விரிகுடாவிற்கு அண்மையில் உள்ளது. மேற்சொன்ன ஏரியின் ஒரு பகுதி விழுப்புரத்திலுள்ள மரக்காணத்திலும், மறுபகுதி வானூர் வட்டத்திலும் அமைந்துள்ளது.

**சுப்ரியா சாகு,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண். 142, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4(2)]த் துறை, 7 டிசம்பர் 2021]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், இராணிப்பேட்டை உள்ளூர் திட்டமிடல் பகுதியில், பின்வரும் வருவாய் கிராமங்களை சேர்ப்பதற்கு, 17–4–1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2இல் 222 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) ஏற்கெனவே வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/2165/74, ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை செய்வதற்கான அவரது நோக்கத்தையும் இதனால் அறிவிக்கிறார். அவ்வாறு செய்வதற்கான நோக்கம், மேற்சொன்ன சட்டத்தின் 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் 7–10–2020 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2 இல் 679 ஆம் பக்கத்தில் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது:–

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், ''அட்டவணை'' என்பதற்குப் பதிலாக, பின்வரும் ''அட்டவணை'' அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

**''அட்டவணை.**

| தொடர் எண் | உள்ளூர் அமைப்பு திட்டப் பகுதியின் பெயர் | வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | இராணிப்பேட்டை | 67. பிஞ்சி |
| | | 62. காரை |
| | | 66. மாந்தாங்கல் |
| | | 65. தண்டலம் |
| | | 69. வாலாஜா |
| | | 52. நவலாக் |
| | | 68. வன்னிவேடு |
| | | 45. மணியம்பட்டு |
| | | 43. நரசிங்கபுரம் |
| | | 63. வானபாடி |

| தொடர் எண் | உள்ளூர் அமைப்பு திட்டப் பகுதியின் பெயர் | வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | 64. செட்டித்தாங்கல் |
| | | 39. முகுந்தராயபுரம் |
| | | 74. குடிமல்லூர் |
| | | 71. அம்மணாந்தாங்கல் |
| | | 70. அனந்தலை |
| | | 36. அம்மூர் |
| | | 41. ஏகாம்பரநல்லூர் |
| | | 42. சீக்கராஜபுரம் |
| | | 44. வடகால் |
| | | 46. தெங்கால் |
| | | 38. லாலபேட்டை |
| | | 37. கல்மேல்குப்பம் |

*[அரசாணை (நிலை) எண். 147, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4–2]த் துறை, 7 டிசம்பர் 2021]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் அட்டவணையின் நெடும்பத்தி (1) இல் குறிப்பிடப்பட்ட உள்ளூர் திட்டமிடல் பகுதிக்கு நிகராக அந்த விவர அட்டவணையின் நெடும்பத்தி (2) இல் குறிப்பிடப்பட்ட உள்ளூர் பகுதிகளை உள்ளூர் திட்டமிடல் பகுதியாக குறிப்பிடுவதற்கான தனது நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை**

| *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியாக உருவாகும் பகுதி (வருவாய் கிராமங்களின் பெயர் மற்றும் எண்)* | |
|---|---|---|
| *(1)* | *(2)* | |
| **வடலூர்** | **குறிஞ்சிப்பாடி வட்டம்** | |
| | 15. ஆபத்தாரணபுரம் | வடலூர் பேரூராட்சி |
| | 16. பார்வதிபுரம் | |
| | 22. சேராக்குப்பம் | |
| | 14. கஞ்சமனாதபுரம் | |
| | 24. எல்லப்பம் பேட்டை | குறிஞ்சிப்பாடி பேரூராட்சி |
| | 25. குறிஞ்சிப்பாடி | |
| | 21. அரங்கமங்கலம் | |
| | 26. கல்குணம் | |
| | 17. கருங்குழி | |
| | 20. மருவாய் | |
| | 19. நைனார்குப்பம் | |
| | 23. ராஜாகுப்பம் | |
| | 10. தென்குத்து | |
| | 9. வாணதிராயபுரம் | |
| | **விருத்தாச்சலம் வட்டம்** | |
| | 130. பெரியாக்குறிச்சி | |
| | 132. கீழ்பாதி | |
| | 135. கோட்டகம் | |
| | 133. மனகதி | |
| | 128. மேல்பாதி | |
| | 131. சேப்பாளநத்தம் | |
| | 134. உய்யக்கொண்டராவி | |

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள், இது தொடர்பாக, மேற்சொன்ன உள்ளூர் பகுதியிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பிற்கு அல்லது நிறுவனத்திற்கு மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை எழுத்துப்பூர்வமாக அளிக்கலாம் என்றும், அவ்வாறு மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் பெறப்படும் மறுப்புரை அல்லது கருத்துரை அரசால் பரிசீலிக்கப்படும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 23, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4–2)]த் துறை, 9 மார்ச் 2022]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் கீழ்க்காணும் விவர அட்டவணையின் நெடும்பத்தி (1) இல் குறிப்பிடப்பட்ட பெயருக்கு நிகராக அந்த விவர அட்டவணையின் நெடும்பத்தி (2) இல் குறிப்பிடப்பட்ட உள்ளூர் பகுதிகளை உள்ளூர் திட்டமிடல் பகுதியாக குறிப்படுவதற்கான தனது நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார்.

**அட்டவணை**

| *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியாக உருவாகும் பகுதி (வருவாய் கிராமங்களின் பெயர் மற்றும எண்)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| திருக்கோவிலூர் | **திருக்கோவிலூர் பேரூராட்சி** |
| | 53. திருக்கோவிலூர் (வடக்கு & தெற்கு) |
| | 52. கிளையூர் |

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள், இது தொடர்பாக மேற்சொன்ன உள்ளூர் பகுதியிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகாரமன்றம் அல்லது நிறுவனத்திற்கு மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை எழுத்துப்பூர்வமாக அளிக்கலாம் என்றும், அவை அரசால் பரிசீலிக்கப்படும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**ஹிதேஷ் குமார் எஸ். மக்வானா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

*(தமிழாக்கம்)*

***ந. அருள்,***
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை
## அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண். 149, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I2)த் துறை, 21–10–2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்கு குழுவினைக் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

### திருத்தங்கள்

மேற்சொன்ன திட்டத்தில்,

(1) பகுதி 13–இன் துணைப்பகுதி (1–A) இல் “ரூ. 400 (ரூபாய் நானூறு மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்

(2) பகுதி 14–இன் துணைப்பகுதி (1) இல் “ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்

(3) பகுதி 14A–இன் துணைப்பகுதி (1) இல் “ரூ. 15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை–I

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

### திருத்தங்கள்

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் “ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை–II

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு அமைப்புசாரா ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

### திருத்தங்கள்

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1 இல் “ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1 இல் “ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை–III

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்ததாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு சலவைத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் “ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் “ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–IV**

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு முடிதிருத்துவோர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் “ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் “ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–V**

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு தையல் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் “ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் “ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–VI**

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு பனைமரத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் “ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் “ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–VII**

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு கைத்திறத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் "ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–VIII**

*[அரசாணை (நிலை) எண் 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு தைத்தறி மற்றும் கைத்தறி பட்டு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் "ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–IX**

*[அரசாணை (நிலை) எண் 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் "ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–X**

*[அரசாணை (நிலை) எண் 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு கைத்தறி ஓவியர்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் "ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை—XI

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு பொற்கொல்லர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

#### திருத்தங்கள்

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19—இன் உட்பகுதி 1—இல் "ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/— (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.
2. பகுதி 20—இன் உட்பகுதி 1—இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/— (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை—XII

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு மண்பாண்டத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

#### திருத்தங்கள்

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19—இன் உட்பகுதி 1—இல் "ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/— (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.
2. பகுதி 20—இன் உட்பகுதி 1—இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/— (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை—XIII

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2007 ஆம் ஆண்டு வீட்டு வேலை செய்பவர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

#### திருத்தங்கள்

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19—இன் உட்பகுதி 1—இல் "ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/— (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.
2. பகுதி 20—இன் உட்பகுதி 1—இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/— (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை—XIV

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2010 ஆம் ஆண்டு விசைத்தறி நெசவு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

#### திருத்தங்கள்

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19—இன் உட்பகுதி 1—இல் "ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/— (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.
2. பகுதி 20—இன் உட்பகுதி 1—இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/— (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–XV**

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2010 ஆம் ஆண்டு நடைபாதை வியாபாரிகள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் "ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–XVI**

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு 2015 ஆம் ஆண்டு சமையல் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் தொடர்ச்சியாக பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

1. பகுதி 19–இன் உட்பகுதி 1–இல் "ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

2. பகுதி 20–இன் உட்பகுதி 1–இல் "ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–I**

*[அரசாணை (நிலை) எண். 151, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்பு தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 6 ஆம் பிரிவை, சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 01.09.2006ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டில் பாகம் II பிரிவு – 2 இல் 1 மற்றும் 2 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொவே. 453(e 1)/2006 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை அறிவிக்கையில் பின்னர் திருத்தப்பட்டவாறான திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையின் அட்டவணையில் நெடும்பத்தி (2) இல் நெடும்பத்தி (1) இல் 1 ஆம் தொடர் எண்ணுக்கு நேராக, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி பணிமனை தொழிலாளர்கள் நல வாரியம் என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–II**

*[அரசாணை (நிலை) எண் 151, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 21 அக்டோபர் 2021.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், 01.09.2006ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டில் பாகம் II பிரிவு 2 இல் 30 முதல் 57 ஆம் வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொவே.453(e–4)/2006ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையுடன் வெளியிடப்பட்ட தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு அமைப்பு சாரா ஓட்டுநர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்னர் திருத்தப்பட்டவாறான கீழ்க்காணும் திருத்தங்களை செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில்,

**(1)** பகுதி **(1)** இல்

(i) உட்பகுதி **(1)** இல், ‘‘தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி பணிமனை தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**(2)** உட்பகுதி **(3)** இல்

(ii) “ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, வேன், டெம்போ, லாரி, மற்றும் பேருந்து ஓட்டுவதில் ஈடுபடுபவர்கள்" என்கிற சொற்றொடருக்கு "பதிலாக'' தானியங்கி பணிமனை மற்றும் ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, வேன், டெம்போ, லாரி மற்றும் பேருந்து ஓட்டுவதில் ஈடுபடுபவர்கள்'' என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**(2)** பகுதி **(2)** இல்

(i) உட்பகுதி (g) இல், ‘‘இனம் **24**ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அரசு துறைகளுக்குச் சொந்தமான வாகனங்கள் அல்லாத ஏனைய ஆட்டோ ரிக்ஷா, டாக்சி வேன், டெம்போ, லாரி, மற்றும் பேருந்து ஓட்டுவதில் யாதொரு உடலுழைப்புப் பணியில் ஈடுபடுபவர்கள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக" இனம் **13** இல் குறிப்படப்பட்டுள்ள தானியங்கி பணிமனைகளின் யாதொரு உடலுழைப்பு பணியில், மற்றும் இனம் **24** இல் குறிப்படப்பட்டுள்ளபடி அரசு துறைகளுக்கு சொந்தமான வாகனங்கள் அல்லாத ஏனைய ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, வேன், டெம்போ, லாரி, மற்றும் பேருந்து ஓட்டுவதில் ஈடுபடுபவர்கள் என்ற பதிவு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(ii) (i) ஆம் உட்பகுதி

ஆட்டோ ரிக்ஷா, டாக்சி வேன், டெம்போ, லாரி மற்றும் பேருந்து ஓட்டுவதில் தன்னை ஈடுபடுத்தி கொண்டவர்கள் என்ற சொற்றொடருக்கு பதிலாக தானியங்கி பணிமனை மற்றும் ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, வேன், டெம்போ, லாரி மற்றும் பேருந்து ஓட்டுவதில் தன்னை ஈடுபடுத்தி கொண்டவர்கள் என்ற சொற்றொடர் அமைத்து கொள்ளப்பட வேண்டும்.

**(3)** தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் என வரும் இடங்களிலெல்லாம் மேற்சொன்ன திட்டத்துடன் இணைக்கப்பட்ட படிவங்கள் உட்பட தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி பணியனை தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**(4)** ‘‘தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதி'' என்கிற சொற்றொடர் வரும் இடங்களிலெல்லாம் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் பணிமனை தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல நிதி" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–I**

*[அரசாணை (நிலை) எண்.* ***152****, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, நாள்.* ***21*** *அக்டோபர்* ***2021****]*

தமிழ்நாடு **1982** ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **33/1982**) **6**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், **24.02.2011**ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டில் பாகம் II–பிரிவு – **2** இல் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் **II(2)/**தொவே.வா/**90(c)/2011** ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் ‘‘தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம்‘‘ – என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘தமிழ்நாடு சமையல் மற்றும் உணவளிப்புச் சேவை தொழிலாளர்கள் வாரியம்‘‘ என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–II**

*[அரசாணை (நிலை) எண்.* ***152****, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை,* ***21*** *அக்டோபர்* ***2021****]*

தமிழ்நாடு **1982** ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **33/1982**) **4** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், **05.08.2015**ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழ்*** பாகம் II-பிரிவு **2** பக்கங்கள் **518 – 556** இல் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் **II(2)/**தொ.வே.வா.**/435/2015** ஆம் எண் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட அறிவிக்கையில், தமிழ்நாடு **2015** ஆம் ஆண்டு சமையல் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்

**(1)** பகுதி **(1)** இல்

(i) உட்பகுதி **(1)** இல், உள்ள ‘‘தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்‘‘ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘தமிழ்நாடு **2015** ஆம் ஆண்டு சமையல் மற்றும் உணவாக்கத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல திட்டம்‘‘ என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(ii) உட்பகுதி **(3)** இல், உள்ள ‘‘உணவு சமைத்தல் சம்மந்தப்பட்ட ஏனைய அனைத்து செயல்பாடுகளிலும்‘‘ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ‘‘உணவு சமைத்தல் மற்றும் உணவளிப்பு நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட ஏனைய அனைத்து செயல்பாடுகளிலும்‘‘ என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(2) பகுதி 2 இல்.

(i) உட்பகுதி (g) இல் உள்ள "உணவு சமைத்தல் சம்மந்தப்பட்ட ஏனைய அனைத்து செயல்பாடுகளிலும்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "இச்சட்டத்தின் விவர அட்டவணையின் 19ஆம் மற்றும் 22ஆம் இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உணவு சமைத்தல் மற்றும் உணவளிப்பு நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட ஏனைய அனைத்து செயல்பாடுகளிலும்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(i) உட்பகுதி (j) இல் உள்ள "ஏனைய அனைத்து செயல்பாடுகளிலும்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக" ஏனைய அனைத்து செயல்பாடுகளிலும் மற்றும் உணவளிப்பு நிறுவனங்களிலும்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(3) திட்டத்திலும் அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவங்களிலும் " தமிழ்நாடு சமையல் தொழிலாளர் நல வாரியம்" என்ற சொற்றொடர் இடம்பெறும் நேர்வுகளில்லெல்லாம் தமிழ்நாடு சமையல் மற்றும் உணவளிப்புச் சேவை தொழிலாளர்கள் நல வாரியம்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(4) "தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதி என்ற சொற்றொடர் இடம்பெறும் நேர்வுகளில்லெல்லாம் தமிழ்நாடு சமையல் மற்றும் உணவளிப்புச் சேவை தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதி என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 153, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I2)த் துறை, 21 அக்டோபர் 2021]*

தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் பகுதி 15 துணைப்பகுதி (1) இல் அட்டவணையில் தொடர் எண்–1 மற்றும் 2இல் உள்ள பதிவுகள் மற்றும் அதற்கு நிகரான பதிவுகளுக்குப் பதிலாக கீழ்காணும் பதிவுகள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். அவையாவன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| "1. EEE | பத்தாம் வகுப்பு படித்து வருகிற பெண் குழந்தைகட்கு மட்டும் | – | 2400 | – | – |
| 2. E | பத்தாம் வகுப்பு தேரியவர்கள் | 2400 | 2400 | – | –" |

*[அரசாணை (நிலை) எண். 154, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I2)த் துறை, 21 அக்டோபர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்பு தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பை முறைப்படுத்துதலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நல திட்டத்தில் பின்வரும் திருத்தங்களை செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் (15) ஆம் பகுதியை சேர்ந்த (1) உட்பகுதியில் அட்டவணையில் தொடர் எண்–3,4 மற்றும் 5ன் பதிவுகள் மற்றும் அவற்றிற்கு நிகரான பதிவுகளுக்குப் பதிலாக பின்வரும் பதிவுகள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். அவையாவன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| "3. EEE | 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு மட்டும் | – | 3000 | – | – |
| 4. EEE | 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு மட்டும் | – | 3000 | – | – |
| 5. E | 12 ஆம் வகுப்பு தேறியவர்கள் | 3000 | 3000 | – | –" |

*[அரசாணை (2ப) எண். 46, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 23 நவம்பர் 2021]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதி, மற்றும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட்ட குழுவின் ஆலோசனையை கருதிப்பார்த்த பின்னர், கீழ்க்காணும் விவர அட்டவணையின் நெடும்பத்தி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, தமிழ்நாடு மாநிலத்தில் வீட்டு பயன்பாட்டுத் துணி வகை உற்பத்தித் தொழில் அதாவது படுக்கையறைத் துணிவகைகள், குறியலறைத் துணி வகைகள் வரவேற்பறைத் துணி வகைகள், அலங்காரத் துணி வகைகள், சமையலறைத் துணி வகைகள் மற்றும் ஒத்த இனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, இதன் (3) ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறாக இதனால் நிர்ணயிக்கிறார்.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

வீட்டு பயன்பாட்டுத் துணி வகை உற்பத்தித் தொழில் அதாவது படுக்கையறைத் துணிவகைகள், குளியலறைத் துணி வகைகள் வரவேற்பறைத் துணி வகைகள், அலங்காரத் துணி வகைகள், சமையலறைத் துணி வகைகள் மற்றும் ஒத்த இனங்களில் சார்ந்த **பணிகளில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணி / பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* |
| | | (i) | (ii) | (iii) |
| | | (ரூ.காசு) | (ரூ.காசு) | (ரூ.காசு) |
| **முக்கிய தயாரிப்புப் பணிகளில் நேரடியாக ஈடுபடாதவர்கள்** | | | | |
| (1) | மேலாளர் | **11390** | **11290** | **11190** |
| (2) | கணக்காளர் | **8890** | **8790** | **8690** |
| (3) | மேற்பார்வையாளர் | **8390** | **8290** | **8190** |
| (4) | ஓட்டுநர் | **8390** | **8290** | **8190** |
| (5) | கணினி இயக்குபவர் | **7990** | **7890** | **7790** |
| (6) | பண்டகக் காப்பாளர் | **7990** | **7890** | **7790** |
| (7) | மின் கம்மியர் | **7990** | **7890** | **7790** |
| (8) | பாதுகாவலர் / காவலாள் | **7640** | **7540** | **7440** |
| (9) | எழுத்தர் | **7640** | **7540** | **7440** |
| **முக்கிய தயாரிப்புப் பணிகளில் நேரடியாக ஈடுபடுபவர்கள்** | | | | |
| (10) | நறுக்குவர் | **7190** | **7090** | **6990** |
| (11) | திருத்துநர் | **7190** | **7090** | **6990** |
| (12) | தையற்காரர் | **7090** | **6990** | **6890** |
| (13) | இஸ்திரி போடுபவர் / இயந்திரத்தை இயக்குபவர் | **7090** | **6990** | **6890** |
| (14) | சிப்பம் கட்டுபவர் | **6390** | **6290** | **6190** |
| (15) | சரிபார்ப்பவர் | **6390** | **6290** | **6190** |
| (16) | பெருக்குபவர் / சுத்தம் செய்பவர் | **5880** | **5780** | **5680** |
| (17) | துணி நேர்த்தியாளர் | **5880** | **5780** | **5680** |
| (18) | உதவியாள் / சுமைதூக்கி | **5880** | **5780** | **5680** |

**விளக்கங்கள்:— (1)** மண்டலங்கள் பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கும்:

மண்டலம்—A : இதில் அனைத்து மாநகராட்சிகளும் அடங்கும்

மண்டலம்—B : இதில் அனைத்து மாநகராட்சிகளும் அடங்கும்

மண்டலம்—C : மண்டலம் A, மற்றும் மண்டலம் B தவிர ஏனைய அனைத்துப் பகுதிகளும் அடங்கும்.

**(2). அகவிலைப்படி:—** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2016 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 255 புள்ளிகளாகும்). 255 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 22.25 (இருபத்தியிரண்டு ரூபாய் இருபத்தைந்து காசு மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்கவேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**அறிவிக்கைக்கான பிழைத்திருத்தம்**

*[அரசாணை (நிலை) எண். 195, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I2)த் துறை, நாள். 9 டிசம்பர் 2021]*

**21.10.2021** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழின்*** பாகம் II பிரிவு 2 இல் 9 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் II(2)/தொநதிமே/751/C–23)/2021 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் பிழைத்திருத்தம் வெளியிடப்படுகிறது.

**பிழைத்திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், "திருத்தம்" என்னும் தலைப்பின் கீழ் 4. "EEE 11–ஆவது படிக்கும் மாணவிகளுக்கு மட்டும் 3000 என்பதற்குப் பதிலாக 4. EEE 12 -ஆவது படிக்கும் மாணவிகளுக்கு மட்டும்–3000" என்று படிக்கவும்.

**அறிவிக்கை**

*[அரசாணை (ப) எண். 81, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (H1)த் துறை, 25 பிப்ரவரி 2022]*

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவளிப்பு நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி, தூய ஆரோக்கிய அன்னை திருத்தலத்தால் நடத்தப்படும் சிற்றுண்டியகத்திற்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்த அறிவிக்கை, வெளியிடப்பட்ட நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் மேற்கொண்டும் மூன்றாண்டுகளுக்கு, மேற்சொன்ன சட்டத்தின் அனைத்து விதித்துறைகளிலிருந்தும் இதனால் விலக்களிக்கிறார். அவையாவன:–

(1) யாதொரு இளைஞரும், நாளொன்றிற்கு ஏழு மணி நேரத்துக்கு மேற்பட்டு பணிபுரிவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது.

(2) யாதொரு தொழிலாளரும், நாளொன்றிற்கு ஒன்பது மணி நேரத்துக்கு மேற்பட்டும் வாரமொன்றிற்கு நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு மேற்பட்டும் பணிபுரிவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது.

(3) ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் சுழற்சி முறையில் வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.

(4) தொழிலாளர்களின் ஊதியங்கள் அவர்களின் சேமிப்பு வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(5) தொழிலாளர்களிடமிருந்து அல்லது ஏனைய மன்றங்களிடமிருந்து, நம்பகத்தன்மையுடைய புகார்கள் எவையேனும் பெறப்படுமாயின், இந்த விலக்களிப்பு இரத்து செய்யப்படுவதற்குட்பட்டதாகும்.

*[அரசாணை (ப) எண் 88, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 04 மார்ச் 2022.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், மேற்சொன்ன 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள பின்வரும் வரைவு, அறிவிக்கை, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறாக, இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், இது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை–600 006 டி.எம்.எஸ். வளாகத்திலுள்ள தொழிலாளர் நலத்துறை ஆணையர் வாயிலாக, அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 6–6–2018 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 526–527 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/513/2018 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் ஊதுவத்தி தயாரிக்கும் தொழிலில் உள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, மேற்சொன்ன விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

## ஊதுவத்தி தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணி / பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* | | | |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | | |
| | | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* | *மண்டலம் D* |
| | | (i) | (ii) | (iii) | (iv) |
| | | (ரூ.காசு) | (ரூ.காசு) | (ரூ.காசு) | (ரூ.காசு) |
| I. | **தயாரிப்புப் பிரிவு :**<br>(1) செப்பமுறா வத்திகளைச் சுற்றுதல் (தொழிற்சாலைகளில்) | **6462.00** | **6355.00** | **6246.00** | **6138.00** |
| | (2) சிப்பம் செய்தல் | **6571.00** | **6462.00** | **6355.00** | **6246.00** |
| | (b) சிப்பம் செய்தல் (வாசனை திரவத்தைத் தெளித்தல் அல்லது வாசனை திரவத்தில் தோய்த்தெடுத்தல் உட்பட) | **6982.00** | **6851.00** | **6733.00** | **6614.00** |
| II. | **நிருவாகப் பிரிவு** | | | | |
| | (1) தட்டச்சர் | **6517.00** | **6410.00** | **6299.00** | **6193.00** |
| | (2) எழுத்தர் | **6484.00** | **6375.00** | **6268.00** | **6159.00** |
| | (3) மேற்பார்வையாளர் | **6571.00** | **6462.00** | **6355.00** | **6246.00** |
| | (4) மேலாளர் | **7004.00** | **6788.00** | **6991.00** | **6571.00** |
| | (5) ஓட்டுநர் (மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தில் தொழிலாளர் என்ற பொருள் விளக்கத்தின் கீழ் வருகிற ஓட்டுநர்கள் தவிர) | **6788.00** | **6680.00** | **6571.00** | **6462.00** |
| | (6) காவலாள் அல்லது அலுவலக உதவியாளர் அல்லது சிற்றேவலர் அல்லது ஏவலாள் | **6138.00** | **6029.00** | **5977.00** | **5911.00** |
| III. | **விற்பனைப் பிரிவு**<br>(a) விற்பனைப் பணியாளர் | **6571.00** | **6138.00** | **5921.00** | **5705.00** |
| | (b) உதவி விற்பனைப்பணியாளர் | **6138,00** | **6029.00** | **5977.00** | **5921.00** |
| IV. | **ஏனைய வகையினர்:**<br>மேற்சொன்னவற்றின் கீழ் வராத ஏனைய பணியாளர் வகையினர் | **6138.00** | **6029.00** | **5977.00** | **5921.00** |
| V. | **செப்பமுறா வத்திகள் சுற்றுதல் (வீட்டுவேலை செய்வோருக்குக்கு):**<br>(a) 6'' வரை செப்பமுறா 1000 வத்திகளைச் சுற்றுதல் | **46.71** | **45.40** | **44.06** | **42.71** |
| | (b) 6'' மேற்பட்ட செப்பமுறா 1000 வத்திகள் சுற்றுதல் | **57.39** | **56.07** | **54.73** | **53.39** |

**விளக்கங்கள்:** மண்டலங்களின் வகைப்பாடு வருமாறு:

மண்டலம்—A: அனைத்து மாநகராட்சிகள்

மண்டலம்—B: அனைத்து நகராட்சிகள்

மண்டலம்—C: அனைத்து நகரியங்கள், பேரூராட்சிகள் மற்றும் பாளையங்கள்

மண்டலம்—D: மண்டலம் A,B மற்றும் C—இல் வராத ஏனைய பகுதிகள்

**(1) அகவிலைப்படி :—** (தொழிலகப் பணியாளர்களுக்கு இணையாக வீட்டில் வத்தி சுற்றுகிற பணியாளர்களுக்கு) **1000** வத்திகளைச் சுற்றுவதற்கு ரூபாய் **42.84** என்ற வீதத்தில் அகவிலைப்படி கணக்கீடு செய்யப்படும். இருப்பினும் நாளொன்றில் சுற்றப்படுகிற வத்திகளின் எண்ணிக்கை **3000**—க்கு மேற்பட்டாலும் கூட அதிகளவு அகவிலைப்படி, ரூபாய் **128.52**க்கு மேற்படக்கூடாது.

**(2) அகவிலைப்படி** :— (தொழிலகப் பணியாளர்களுக்கு):—

(i) அகவிலைப்படி, **2010** ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது **2001** ஆம் ஆண்டில் **100** புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட **161** புள்ளிகள் ஆகும்). **161** புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ. **35.43** (மூப்பத்தைந்து ரூபாய் நாற்பத்து மூன்று காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய **12** மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளிக் குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(iv) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாத ஊதியத்தை **26** ஆல் வகுக்க வேண்டும்.

(v) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(vi) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (ப) எண். 96, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 7 மார்ச் 2022.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதியுள்ள அறிவிக்கையின் கீழ்க்காணும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**(2)** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—**600 006**—சுகாதார மருத்துவப் பணிகள் வளாகத்திலுள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—**600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

**1948**ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி மற்றும் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் **26—09—2018** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2 இல், **908** முதல் **910** வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/852/2018 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் கருங்கல் தொழிலில் பணிபுரிபவர்களுக்கான கீழ்க்காணும் விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு, வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் **(3)**ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**கருங்கல் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை* | *மாதாந்திர குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | | | |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | | |
| | | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* | *மண்டலம் D* |
| | | (ரூ.காசு) | (ரூ.காசு) | (ரூ.காசு) | (ரூ.காசு) |
| | **நிலை—I** | | | | |
| **1** | மேலாளர் | **13455.00** | **13252.00** | **13047.00** | **12844.00** |
| **2** | அடையாளமிடுபவர்/வடிவமைப்பவர் | **12438.00** | **12234.00** | **12030.00** | **11828.00** |
| **3** | தரக்கட்டுப்பாட்டாளர்/செதுக்குபவர் | | | | |
| **4** | இயந்திர மேற்பார்வையாளர் | **11828.00** | **11625.00** | **11420.00** | **11217.00** |
| **5** | மின் மேற்பார்வையாளர் | | | | |
| **6** | தானியங்கி மெருகேற்றுபவர் | | | | |
| | **B நிலை—II** | | | | |
| **7** | துளையிடுபவர் | **11420.00** | **11269.00** | **11118.00** | **10965.00** |
| **8** | மின்பணியாளர் | | | | |
| **9** | பொருத்துநர் | | | | |
| **10** | பற்றவைப்பவர் | | | | |
| **11** | சாணை பிடிப்பவர் | **11217.00** | **11066.00** | **10913.00** | **10762.00** |
| **12** | மெருகேற்றுபவர் | | | | |
| **13** | வெட்டுங்கருவி இயக்குபவர் | | | | |
| **14** | உளி கொத்துபவர் | | | | |
| **15** | குழாய்வேலை செய்பவர் | | | | |
| **16** | டிப்பர் ஓட்டுநர் (Tipper Driver) | | | | |
| **17** | டிரெயிலர் ஓட்டுநர் (Trailor Driver) | | | | |
| **18** | காங் ட்ரீ ஓட்டுநர் (Gang Tree Driver) | | | | |
| **19** | பாரந்தூக்கி இயக்குபவர் | | | | |
| **20** | காங் அறுப்பான் இயக்குபவர் (Gang Saw Operator) | | | | |
| **21** | கணினி இயக்குபவர் | | | | |
| **22** | கணக்காளர் | | | | |
| **23** | பண்டகசாலை காப்பாளர் | | | | |
| | **C நிலை—III** | | | | |
| **24** | எழுத்தர்/காசாளர் | **10607.00** | **10507.00** | **10404.00** | **10201.00** |
| **25** | பண்டகசாலை உதவியாளர் | | | | |
| **26** | ஸ்லிங்கர் (Slinger) | | | | |
| **27** | சாம்பரிங்மேன் (Chamberingman) | | | | |
| **28** | கவை முள் ஊர்தி இயக்குபவர் | | | | |
| **29** | தச்சுவேலை செய்பவர்/சிப்பமாக்குபவர் | | | | |
| **30** | கணினி உதவியாளர் | | | | |
| **31** | மின் உதவியாளர் | | | | |
| **32** | இயந்திர உதவியாளர் | | | | |

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை* | *மாதாந்திர குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | | | |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | | |
| | **D நிலை – IV** | | | | |
| 33 | அலுவலக உதவியாளர் | | | | |
| 34 | காவலாள்/பாதுகாவலாள் | | | | |
| 35 | சுத்தம் செய்பவர்/பெருக்குபவர் | 10201.00 | 10152.00 | 10100.00 | 10049.00 |
| 36 | சுமை ஏற்றுபவர் (மற்றும் மேற்சொன்ன எந்த வகைகளின் கீழ் வராத தொழிலகத்தின் ஏனைய பணியாளர் அனைவரும்) | | | | |

**விளக்கங்கள்:—**

**(1) மண்டலங்களின் வகைப்பாடு பின்வருமாறு :**

மண்டலம்–A – அனைத்து மாநகராட்சிகள்.

மண்டலம்–B – மூன்றாம் நிலை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகள்.

மண்டலம்–C – அனைத்து பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பாளையங்கள்.

மண்டலம்–D – மண்டலம் A, B மற்றும் C–இன்கீழ் வராத ஏனைய பகுதிகள்.

II **(1). அகவிலைப்படி:–** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(a) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகளாகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 62.40 காசுகள் (ஆறுபத்திரண்டு ரூபாய் நாப்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(b) அகவிலைப்படியானது, முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(c) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ஆர். கிர்லோஷ்குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.